[1st April 1958

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) & (*b*) Orders have been issued abolishing the Language Tests in languages other than Tamil.

(*c*) Does not arise.

(*d*) The Government have no information about the abolition of the Language Tests for Government servants in those States.

*All-India Radio*

* 492 *Q*.—SRI A. VEDARATHNAM : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the Government are giving any advice in regard to the educational programmes of the All-India Radio, Tiruchirappalli and Madras;

(*b*) if so, whether the Government have any information as to how their advice is given effect to; and

(*c*) whether broadcasts on Basic Education are included in the educational programmes of the All-India Radio?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

(*c*) Yes.

SRI A. VEDARATHNAM : இந்த கல்வி ஒலிபரப்புவிஷயத்தில் வானொலி நிலையத்தில ஒரு ஆலோசனைக் கமிட்டி இருக்கிறதா? அதிலே நம்முடைய கல்வி இலாகா அதிகாரிகள் பங்கு எடுத்துக்கொள்கிறார்களா? அப்படி இருந்தால் ஆதாரக் கல்வியைப் பரப்புகின்ற விஷயமாக அவர்கள் மாறான அபிப்பிராயம் தெரிவித்திருக்கிறார்கள் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : கல்வி இலாகாவிலிருந்து ஒரு பிரதிநிதி அந்த கமிட்டியில் அங்கம் வகிக்கிறார்கள். அவர் எந்தவிதமான அபிப்பிராயத்தைச் சொல்லியிருக்கிறார் என்று என்னிடம் தகவல் இல்லை.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : சில காலமாக "வானொலி" என்று சொல்வதை விட்டு "ஆகாச வாணி" என்று சொல்கிறார்கள். இலங்கையில் கூட "வானொலி" என்று தான் சொல்லுகிறார்கள். சர்க்கார் அதைப் பற்றி ஏதாவது உத்திரவு பிறப்பித்தார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : கனம் அங்கத்தினர் அவர்கள் "வானொலி" என்று சொல்வதை நாங்கள் எடுத்துக்கொள்ளத் தயாராக இருக்கிறோம். ஆனால் அதை ஆல்-இண்டியா ரேடியோ எடுத்துக்கொண்டு அவர்கள் உபயோகிக்க இந்தக் கேள்வியைப் பார்லிமெண்டில் போட வேண்டும்.

SRI A. V. P. ASAITHAMBI : "ஆகாசவாணி" என்ற வார்த்தைக்கு பதிலாக "வானொலி" என்ற வார்த்தையை உபயோகிக்க வேண்டுமென்று மத்திய சர்க்காருக்கு இந்த சர்க்கார் எழுதுமா ?

MR. SPEAKER : The hon. Member is going away from the main question.

1st April 1958]

**Sri A. VEDARATHNAM :** ஆதாரக் கல்வியில் இணைப்பு போதனை (காரலேட்ட் டீசிங்) மிக முக்கியமான அம்சம். அது போதிப்பதும் கொஞ்சம் கடினம். சிறந்த நிபுணர்களை கொண்டு கல்வி ஒலிபரப்பு சமயத்தில் இணைப்பு போதனையை ஒலிபரப்ப அரசாங்கம் முன் வருமா ?

**The Hon. Sri C. SUBRAMANIAM :** கனம் அங் தினர் அவர்கள் இந்த யோசனையை அகில இந்திய ரேடியோவிற்கு எழுதி அனுப்பலாம். அவர்கள் இதைக் கட்டாயம் கவனிப்பர்கள் என்று நினைக்கிறேன்.

**Sri A. A. RASHEED :** Sir, have the Government received any complaint from the schools regarding the Broadcast?

**The Hon. Sri C. SUBRAMANIAM :** I do not have any information here, Sir.

### *District Headquarters Hospitals*

* 493 *Q.*—**Sri V. K. KOTHANDARAMAN :** Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) the number of beds provided for (i) men, (ii) women and (iii) children, in each of the district headquarters hospitals during the years 1955, 1956 and 1957; and

(*b*) the number of (i) in-patients, (ii) out-patients treated therein during these years?

**The Hon. Sri M. A. MANICKAVELU :** (*a*) & (*b*) A statement[a] is placed on the table of the House.

**Sri V. K. KOTHANDARAMAN :** ஸார், நமது ராஜ்யத்திலே அதிகப்படியான ஜனத் தொகை கொண்டது சேலம் ஜில்லா. அத்துடன் மேஜையின் மேல் வைக்கப்பட்டிருக்கும் லிஸ்டில் சேலம் ஜில்லா ஆஸ்பத்திரிக்கு அதிகப்படியான நோயாளிகள் வருவதாகக் காட்டப்பட்டிருக்கிறது. குறைந்த நோயாளிகள் இருந்தும் தஞ்சை ஜில்லா ஆஸ்பத்திரியில் 766 பெட்டுகள் இருந்தும், அதில் பாதிஎண்ணிக்கைதான் சேலம் தலைமை ஆஸ்பத்திரியில் இருக்கக் காரணம் என்ன ?

**Mr. SPEAKER :** இதற்கு மந்திரி அவர்கள் எப்படி பதிலளிப்பார்கள் ?

**The Hon. Sri M. A. MANICKAVELU :** இரண்டு பக்கங்கள் பதில் கொடுத்திருக்கிறேன். இன்னும் விவரம் வேண்டுமானுல் தனியாகக் கேள்வி கேட்டால் கொடுக்கிறேன்.

**Sri P. G. MANICKAM :** கோயமுத்தூர் ஜில்லா தலைமை ஆஸ்பத்திரியில் தங்கியிருந்து சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது. ஆனுல் படுக்கைகளின் எண்ணிக்கை குறைவாக இருக்கிறது. படுக்கைகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்த சர்க்கார் முன் வருவார்களா ? 8-40 a.m.

**The Hon. Sri M. A. MANICKAVELU :** சாத்தியமான வகையில் ஆங்காங்கே படுக்கைகள் அதிகப்படுத்தப்பட்டுத் தான் வருகின்றன.

---

* Printed as Appendix I on page 485 infra.